# பனித்துளி செய்திகள்!

"அவர் சொல்ல ஆகும்! அவர் கட்டளையிட நிற்கும்!!" (சங்கீதம் 33:9)

துளி செய்திகள் உங்கள் வாழ்வை சாரம் ஏற்றும்..... சவாலிடும்!

(திங்கள்தோறும்)

03.06.2024

## 23. இந்த நாளிலும், களிகூருங்கள்!

உண்மைதான் 'இன்று' கர்த்தர் உண்டுபண்ணின நாளில் களிகூர்ந்திருப்பதே மகத்துவமான ஜீவியம்! ஆகிலும், 'இன்றோ' நான் தள்ளப்பட்டு, புறக்கணிக்கப்பட்ட நாளாயிருக்கிறதே, இதையும் கர்த்தர் உண்டுபண்ணின நாள் என எப்படி களிகூர்ந்திட முடியும்? கேளுங்கள் இரகசியத்தை.... "இந்த புறக்கணிக்கப்பட்ட கல்லை, தன் கரத்தால் எடுத்து, அது உங்கள் குடும்பமானாலும் அல்லது கர்த்தருடைய வீடாகிய சபையானாலும், உங்களை கட்டப்படுவதற்கு முக்கிய "மூலைக்கல்லாக" உங்களை மாற்றும் அதிசயம் காண்பீர்கள்! விசுவாசத் துடன், இந்த நாளில் களிகூருங்கள்! இது கர்த்தரால் மாத்திரமே உண்டாகும் செயல்! (சங்கீதம்.118:22-24).

– ரத்னம்